செய்தி வெளியீடு எண்: 74/2024 நாள்: 17.10.2024

## செய்தி வெளியீடு

### நுகர்வோர்கள் தங்களின் குடிநீர் / கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்களை சென்னை குடிநீர் வாரிய அங்கீகரிக்கப்பட்ட கட்டண முறைகள் வாயிலாக மட்டுமே செலுத்த வேண்டும்

### சென்னை குடிநீர் வாரியம் தகவல்

நுகர்வோர்கள் தங்களின் குடிநீர் / கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்களை சென்னை குடிநீர் வாரிய அங்கீகரிக்கப்பட்ட கட்டண முறைகள் வாயிலாக மட்டுமே செலுத்த வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

சென்னை குடிநீர் வாரியத்தால் அங்கீகரிக்கப்படாத சில நபர்கள், தொலைபேசி வாயிலாக நுகர்வோர்களை அணுகி குடிநீர் / கழிவுநீர் வரி மற்றும் கட்டண நிலுவைத் தொகையை அவர்களின் தனிப்பட்ட வங்கிக் கணக்குடன் இணைக்கப்பட்ட மொபைல் எண்ணுக்கு Gpay, Phonepe, Paytm, போன்ற UPI செயலிகள் மூலம் செலுத்துமாறு கேட்பதாகவும் தவறும் பட்சத்தில் குடிநீர் / கழிவுநீர் இணைப்பு துண்டிக்கப்படும் எனக் கூறி பணம் பறிப்பதாக புகார்கள் வாரியத்திற்கு வருகின்றன.

எனவே, நுகர்வோர்கள் நிலுவைத் தொகையை செலுத்தும் போது எச்சரிக்கையாக இருக்குமாறும் தனிப்பட்ட மொபைல் எண்ணுக்கு நிலுவைத் தொகை செலுத்தக் கூறி, அங்கீகரிக்கப்படாத நபர்களிமிருந்து வரும் அழைப்புகளை நிராகரிக்குமாறும் சென்னை குடிநீர் வாரியம் கேட்டுக்கொள்கிறது.

மேலும், கீழே குறிப்பிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட கட்டண முறைகள் வாயிலாக மட்டுமே வாரியத்திற்கு நிலுவைத் தொகையை செலுத்துமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சென்னை குடிநீர் வாரிய இணையதளமான www.cmwssb.tn.gov.in அல்லது நேரடி நிலுவைத் தொகை செலுத்தும் இணைப்பான https://bnc.chennaimetrowater.in/#/public/cus–login ஆகிய இணைப்புகளின் வாயிலாக செலுத்தலாம்.

...2...

Gpay, Phonepe, Paytm, போன்ற UPI செயலிகளில் உள்ள பயன்பாட்டு பில் செலுத்தும் வகையின் (Utilities Category under Bill payments option) கீழ் CMWSSB தேர்ந்தெடுப்பதன் மூலம் உங்கள் பில் எண் & மொபைல் எண்ணை உள்ளிட்டு பணம் செலுத்தலாம்.

காசோலை / வரைவோலை / டெபிட் கார்டு / கிரெடிட் கார்டு மூலம் 15 பகுதி அலுவலங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் உள்ள வசூல் மையங்கள் வாயிலாக செலுத்தலாம். வசூல் மையங்களில் உள்ள BBPS QR குறியீடுகளை ஸ்கேன் செய்வதன் மூலம் செலுத்தலாம்.

சென்னை குடிநீர் வாரிய பணிமனை மேலாளர்கள் கொண்டு வரும் iPoS இயந்திரங்கள் மூலம் செலுத்தலாம்.

மேலும், நுகர்வோர்கள் தங்களது நிலுவைத் தொகையை செலுத்துவதில் ஏதேனும் சிரமம் ஏற்பட்டால் 044 – 4567 4567 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளுமாறு வாரியம் கேட்டுக்கொள்கிறது.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள

CHN_Metro_Water CMWSSB chennaimetrowater cmwssb.tn.gov.in